புதுவையில் தி. மு. கழக தோழர்கள் மீது தாக்குதல்

REGD. No M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆடிமீ 15வ வெள்ளி (30—7—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆடிமீ 16வ சனி (31—7—54)	இதழ்: 40

விடுதலைப் படையினர் மீது வீணர்களின் பாய்ச்சல்!

15 பேர் கைது செய்யப்பட்டனர்

இணைப்பு ஊர்வலம் நடத்திய கழகத் தோழர்கள் மீது ஏகாதிபத்தியத்தின் சீற்றம்

புதுச்சேரி, ஜூலை 29—

இந்தியாவுடன் இணைய வேண்டுமென்று புதுவை, மற்றும் பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் போராடும் விடுதலைப் படையினரை புதுவை போலீசார் மிருகத்தனமாகத் தாக்குவதும், துப்பாக்கியைக் காட்டி மிரட்டுவதும், அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன.

பிரெஞ்சிந்தியப் போலீசார் இரண்டு தி. மு. கழகத் தோழர்களை 'லாக்கப்'பில் அடித்ததாகத் தெரிகிறது

பிரெஞ்சிந்தியத் திட்டுக்கள் இந்தியாவுடன் சேர வேண்டுமென்ற கோரிக்கை புதுவையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நேற்று காலை புதுவையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் 15 பேர் கழகக் கட்டிடத்திலிருந்து புறப்பட்டு, தேசியக் கொடிகளுடன் இணைப்பு ஒலிகளை எழுப்பிக்கொண்டு, நகரின் முக்கியத் தெருக்களின் வழியே ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலம் நகர போலீஸ் ஸ்டேஷன் அருகே சென்றபோது பதினைந்து கழகத் தோழர்களையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்த தேசியக் கொடிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

'லாக்-அப்'பில், கழகத் தோழர்களை புதுவைப் போலீசார் மிகவும் கடுமையாக எச்சரித்தார்களாம்!

தாய்நாட்டுடன் பிரெஞ்சிந்தியத் திட்டுக்கள் இணைய வேண்டுமென்ற கோரிக்கையுடன் விடுதலைக்காக உழைக்கும் அத்தோழர்களில் இருவரைப் போலீசார் 'லாக்-அப்'பில் அடித்தனர் என்று தெரிகிறது.

சில மணி நேரங்கள் காவலில் வைக்கப்பட்ட பின்னர் பதினைந்து கழகத் தோழர்களும் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

எலும்புருவான இந்தி மொழியை தேசிய மொழியாகத் திணித்தனர்!

விடுதலை நேரத்தில் நடந்த விபரீதம்!

மொழியின் வளம் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல!

ரகுவீராவின் வீம்புப் பேச்சுக்கு 'டெக்கான் ஹெரால்ட்' தரும் விளக்கம்

ஐம்பதாண்டானாலும் இந்தி, வழக்கில் வராது!

"பெரும் அளவில் சாதாரண வாழ்க்கை நடத்தும் கிராம மக்களால் பேசப்படுவதால் மட்டுமே ஒரு மொழி சிறந்தது என்றாகிவிடாது; ஒரு மொழி மதிக்கத் தக்கது என்றால், அது தன்னிடம் ஆழ்ந்த இலக்கியங்கள் கொண்டதாக விளங்க வேண்டும்."

"ஸ்காண்டிநேவிய தீபகற்பத்தில் நார்வே மொழியினை 50 லட்சத்திற்கு உட்பட்ட மக்களே பேசுகின்றனர்; ஆனால் நார்வே மொழி மிகவும் வன்மை பொருந்திய மொழியாகும். அறிவிற் சிறந்த பலரையும், ஹென்ரி இப்சன் போன்ற சிந்தனையாளர்களையும் கொண்டிருந்ததால்தான் அந்த மொழி வன்மை பெற்று விளங்குகிறது; டேனிஷ் மொழியிலிருந்து பல நூல்களை மொழி பெயர்த்துவிட்டதால் மட்டுமே அது சிறந்து விளங்கவில்லை."

"*ஆகவே ஒரு மொழியின் இலக்கியச் செல்வமும், அதன் சிறப்பும் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள ஏராளமான மக்கள் அதனைப் பேசுகிறதால் மட்டுமே ஏற்பட்டு விடாது.*"

"தென்னாட்டிலே இந்திக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு வெறும் மொழியின் மீதுள்ள எதிர்ப்பு அல்ல; ஒரு நாட்டினுடைய தேசிய மொழியாகும் அளவில் இலக்கிய கலாச்சார தன்மை இந்தி மொழியில் இல்லாத காரணத்தாலும், மிகவும் பிற்போக்கான மொழி ஒன்றை, அதுதான் இந்தியாவின் தேசிய மொழியாவதற்கு தனி உரிமை பெற்றதாகும் என்ற தவறான எண்ணத்தின் மீது அது சிறந்த மொழி என்று விவதிப்பதாலும் ஏற்பட்டதாகும்."

—என்று சமீபத்தில் சென்னை வந்து, இந்தி மொழியின் மேன்மையையும் அரசியல் அலுவல்களுக்கு தமிழ் தகுதியான மொழியல்ல என்றும் கூறிச் சென்ற டாக்டர் பேராசிரியர் ரகுவீரா அவர்களின் கருத்தைக் கண்டித்து, பெங்களூரிலிருந்து வெளிவரும் 'டெக்கான் ஹெரால்டு' பத்திரிகை தலையங்கம் தீட்டியுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"சுதந்திரப் போரை நடத்தினவர்கள், ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை வெறுத்து இந்தி மொழியின் மீதுள்ள பற்றுதலால், அது நாட்டிலே ஒற்றுமை ஏற்படுத்தும் தகுதி பெற்றது என்று பிரச்சாரம் செய்தனர்.

இக்கூற்றை உலகம் நம்பாது என்பதற்குச் சான்றுகளுள்ளன. 21 மொழிகளையும், அவற்றில் பலவிதமான மொழிப் பிரிவுகளையும் கொண்ட ரஷ்ய நாட்டிலே, ஒரே மொழிதான் ஒற்றுமையை ஏற்படுத்தும் என்று தவறாக, கௌரவமான முறையில் வாதிக்கப்படவில்லை.

டாக்டர் ரகுவீரா, 'இந்திய அரசியல் சட்டம் 13 மொழிகளை பாரபட்சமின்றி சமநோக்குடன், தவறான நோக்கமெதுமின்றி ஒப்புக் கொண்டிருக்கிறது என்றும், இம்மொழிகளிலெல்லாம் இந்தியானது மற்ற மொழிகளைக் காட்டிலும் அதிகமான மக்களால் பேசப்படுகிறது என்பதால் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது" என்றும் கூறியது பற்றி 'டெக்கான் ஹெரால்டு' தன் கருத்தைத் தெரிவிப்பதாவது:—

"*ஒரு மொழியின் சிறப்பும், கலாசார வளர்ச்சிக்கு உதவும் பண்பும், பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரச்சினைகளால் ஏற்படுவன அல்ல;*

"*இந்தி ஆதிக்க வெறியர்கள் மற்ற மொழிகளிலிருந்து கடன் வாங்கி இந்தியை வளப்படுத்தலாம் என்று கூறுவது நமக்கும் பரிகாசமாக இருக்கிறது;*

"*ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் போன்றவர்கள் இந்த விதமான நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றனர்; பலர் இந்தி மொழியில் உள்ள குறைபாடுகளை பல நூல்களை வேறு மொழியிலிருந்து மொழி பெயர்த்து அகற்றிவிடலாம் என்றும் நிவர்த்தித்து இந்திக்கு தேசியத் தன்மையை உண்டாக்கலாம் என்று நம்புகின்றார்கள்; ஆனால் இவர்களெல்லாம் பாடப் புத்தகங்களாலோ,*

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு

செஷன்ஸ் விசாரணை

சென்னை, ஜூலை 30—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை 9—8—54ல் திருநெல்வேலியில் நடைபெற விருப்பதை முன்னிட்டு சென்னை வழக்கறிஞர் திரு கே. நாராயணசாமி அவர்களும், கடலூர், புதுநகர் வழக்கறிஞர் திரு. ஆர். இளம்வழுதி அவர்களும், இன்று திருநெல்வேலி எக்ஸ்பிரசில், திருநெல்வேலிக்குச் சென்று, 31—7—54ல், அங்கு நம் வழக்கறிஞர்களைக் கண்டு பேசி வருவார்கள்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், 31-7-54ல் திருநெல்வேலியில் நம் வழக்கறிஞர்களைக் கண்டு பேசுவார்.

தேவிகுளத்தில் 144 நீடிக்கப்படமாட்டாது

கோட்டயம், ஜூலை 28—

தேவிகுளத்தில் பிறப்பிக்கப் பட்டிருக்கும் 144 தடை உத்திரவு ஜூலை 28 இரவு 12 மணியுடன் முடிவடைகிறது. மேற்கொண்டு 144 தடை உத்திரவு நீடிக்கப்படமாட்டாது என்று தெரிகிறது. என்றாலும் போலீஸ் பாதுகாப்புகள் ஏராளமாக உள்ளதென்று தெரிகிறது.

நீதிபதிகள் வேலை நிறுத்தம்!

டமாஸ்கஸ், ஜூலை 29—

சிரியா நாட்டில், இன்று நீதிபதிகள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்தனர். 'வழக்கு மன்றங்களிலிருந்து வெளியேறி விடுவோம்' என்ற நீதிபதிகளின் அச்சுறுத்தலுக்காக சிரிய நாட்டுக் கல்வி மந்திரி நூரத் காசிம் தனது பதவியை விட்டு விலகி விட்டதாக அறியக் கிடக்கிறது. அவருடைய பதவி நீக்கம், அதிகார பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

அணுசக்தியை தொழில் வளர்ச்சிக்கு உபயோகிக்கவும், உரேனிய உற்பத்தி செய்யவும் ஆலோசிப்பதற்காக காமன்வெல்த் மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்ற யோசனையை மக்கள் சபையில் சர்ச்சில் நிராகரித்தார்.

போர்ச்சுகீசிய ஆதிக்கம் கரைகிறது!

மேலும் 6 கிராமங்கள் விடுதலை

வாபி, ஜூலை 29—

போர்ச்சுகீசிய இந்தியப் பகுதியான டாமனில் மேலும் 6 கிராமங்களை சுதந்திர கோவா விடுதலைத் தொண்டர்கள் விடுவித்தனர் என்று தெரிகிறது.

டாமனில், நர்காஹவேலி தாலுகாவிலுள்ள அட்ல், கார்பாரா, ஷானியா ஆகிய ஆறு கிராமங்கள் போர்ச்சுகீசியப் பகுதிகள் விடுதலை பெற்று விட்டன.

'எல்லைக் குழு இப்போது இல்லை"

ஆந்திர அமைச்சர் அறிவிப்பு

கர்நூல், ஜூலை 29—

ஆந்திர—சென்னை எல்லைத் தகராறுகளைத் தீர்க்க எல்லைக் குழு சமீபத்தில் நியமிக்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

சென்னை, ஆந்திர மாநில சர்க்கார்களும், மத்திய சர்க்காரும் இதைவிட முக்கியமான பிரச்னைகளை தீர்ப்பதில் ஈடுபட்டுள்ளனவாம்.

ஆகையால் எல்லைத் தகராறுக்கு உடனடி கவனம் செலுத்த சாத்தியமில்லை என்று பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் அறிவித்துள்ளாராம்!

எல்லைத் தகராறில் சேலம், சித்தூர் எல்லையில் சேலம் மாவட்டத்தில் உள்ள ஒசூர், கிருஷ்ணகிரி தாலுகாக்கள் சம்பந்தப்பட்டுள்ளன. இதில் குறிப்பாகக் கூறக் கூடியவை ஆந்திராவில் சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளாகும்.

இத்தாலுகாக்களில், மொழி வாரி மக்கள் எண்ணிக்கை, மற்ற விவரங்கள் சேகரிக்க இன்னும் ஐந்து அல்லது ஆறு மாதங்களாகும். மாநில புனரமைப்புக் குழு செப்டம்பர் மாதத்தில் ஆந்திரவுக்கு வர இருக்கிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30—7—54 வெள்ளி

வளர்க சமரசம்

உலகிலே போர் இல்லை! பீரங்கிச் சத்தம் அடங்கிவிட்டது! வெண்புறா வனப்புடன் பறக்கிறது, வேடன் அம்புறாத் தூணியை எடுத்து வீசிவிட்டான் என்று எண்ணத் தக்க நிலைமை காண்கிறோம். எட்டு ஆண்டுகளாக மக்களை வெட்டி வீழ்த்தும் வேலை நடைபெற்றுக்கொண்டு வந்த இந்தோ—சீனாவில், இப்போது அமைதி நிலவுகிறது. நம்புவதற்கே கூட முடியாத நிலை!! போர் வெறி பிடித்தலையும் வல்லரசுகளாவது சமரசம் பேசி வெற்றி காண்பதாவது, என்றுதான் எவரும் எண்ணியிருப்பர். ஆனால் எப்படியோ, பித்தம் தெளிந்ததாலோ, போராபத்தை இனியும் தேடிக் கொள்ளலாகாது, தாங்கமாட்டோம் என்ற அறிவு உதயத்தாலோ, வல்லரசுகளின் பேராசை மூண்டிவிடும் போருக்கு நாங்கள் பலியாவதா, உலகு சுடுகாடு ஆவதா, என்று கொதித்தெழுந்து கேட்கும் சமாதான விரும்பிகளின் முழக்கம் கேட்டு மனம் திருந்தியதாலோ, எதனாலோ இன்று, போர் நிறுத்த மனப்போக்கு ஏற்பட்டிருக்கிறது. மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கது தான். பாராட்டவும் செய்கிறோம்.

இந்தோ-சீனா போர்நிறுத்த செய்தி கேட்டுக் களித்தோம் அதைத் தொடர்ந்து மற்றோர் மகிழ்ச்சிகரமான செய்தி வருகிறது, எகிப்திலே, எந்த நேரத்திலும் போர் மூண்டுவிடக் கூடும் என்று இருந்து வந்த நிலைமை மாறிவிட்டது, பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் சமரசம் ஏற்பட்டுவிட்டது, இனி இரு நாடுகளுக்குள்ளும், தன்மானத்தோடு கூடியதோர் புதிய உறவு மலர வழி கிடைத்திருக்கிறது என்று அறிகிறோம், அகமிக மகிழ்கிறோம்.

எகிப்து, பழம் பெரும் வரலாறு படைத்த நாடு! நீல நதியின் அணைப்பிலே வளர்ந்த எழில் அரசு! அங்கு, பிரிட்டன் தன் ஏகாதிபத்தியப் பிடியைக்கொண்டு, ஆதிக்கம் புரிந்து வந்தது. சூயஸ் கால்வாய் பாதுகாப்பு எனும் சாக்கிலே, பெரும்படையை வைத்துக் கொண்டு, பீதி கிளப்பி வந்ததுடன், எகிப்து நாட்டின் தன்மானத்தைக் குலைத்து வந்தது.

எகிப்து நாடு, இந்தப் போக்கால் கொதித்தெழுந்து, விடுதலைக் கிளர்ச்சியை நடத்திக் கொண்டிருந்தது பல ஆண்டுகளாகவே, எகிப்து நாட்டுக்கு ஒரே ஒரு குறிக்கோள், பிரிட்டிஷ் துருப்புகளைத் தாயகத்திலிருந்து வெளியேற்றியாக வேண்டும் என்பதுதான்.

பாதுஷாக்கள் ஒரு சிலரும், பக்கிரிகள் மிகப் பலரும்—பகட்டோர வாழ்வினர் சிலரும் பாட்டாளிகள் மிகப் பலரும் என்ற நிலையில் எகிப்து நாடு வைக்கப்பட்டிருந்ததால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், பாதுஷாக்கள் நிலையில் இருந்தவர்களை ஆசை காட்டி அடக்கியும், பக்கிரிகள் நிலையிலிருந்த பாமரமக்களை அச்சமூட்டி அடக்கியும் வைத்துக்கொண்டு, ஏகாதிபத்திய ஆணவத்தில் வெற்றி கண்டு வந்தனர். அவ்வப்போது பூத்த, புரட்சிகளையும் கடுமையாக அடக்கி அழித்தனர்.

ஏகாதிபத்தியமோ, பாசிசமோ, ஆட்சிமுறை எப்படி இருப்பினும், ஆள்வோர் யாராக இருப்பினும், என் மாளிகையிலே மதுவும், மங்கையும், ஆடம்பரமும், ஆனந்த வாழ்வும், இருந்தால் போதும், என் பேழையில் பொருளும், என் பிரியவதிகளுக்கு மணியும் முத்தும் இருந்திட வழி கிடைத்தால் போதும், என் உல்லாச வாழ்வுக்கு ஊறு நேரிடாதவரை, வெள்ளையனோ, வேறுநாட்டானோ எவன் ஆதிக்கம் செலுத்தினால் என்ன, சூயஸ் கால்வாய் பிரிட்டனிடம் இருந்தால் என்ன, பிரான்சிடம் போனால் என்ன, என் சுகவாழ்வு காப்பாற்றப்பட்டால் போதும், என்ற போக்கிலே, எகிப்து நாட்டுச் சீமான்கள் எண்ணிக் கிடந்தனர். மக்கள் விழிப்படையாத நிலை! இந்தச் சூழ்நிலையின் சிகரம்போல் இருந்தவர்தான், பரூக் மன்னர்!

விடுதலைக் கிளர்ச்சிகள்பலப்பல நடத்தி நடத்தி, குருதி கொட்டி, மக்களை விழிப்படையச் செய்தனர், அறப்போர் வீரர்கள்! அவர்தம் அணிவகுப்பு திரண்டது, மாளிகைவாசிகள் மருண்டனர்! மக்களின் கண்கள், கேள்விக் குறிகளாயின, படையை மருண்டது. மாளிகைகளிலே மருட்சி புகுந்தது. இந்த நிலையின் இறுதிக் கட்டமாக அமைந்ததுதான், பரூக் மன்னர் விரட்டப்பட்ட சம்பவம். எகிப்து இனி, எழுச்சி பெற்ற மக்களின் பாசறை! பசப்பு மொழி கேட்டு மயங்குவார் இல்லை, பயமூட்டினால் அடங்கிவிடுவாரும் இல்லை, பாமர மக்கள் யாரார்க்கும் காலமிது, என்ற இப்பால் கவிதையின்படி காரியம் நடைபெறுகிறது, எனவே இனி நாம், முரட்டுத்தனம் காட்டுவது பலன் தராது; மரியாதையாக வெளியேறிவிடுவதே மேல் என்ற அறிவு பெற்று, ஆணவத்தை விட்டொழித்து, பிரிட்டன் எகிப்து சர்க்காருடன் சமரசம் செய்து கொண்டது.

போர் மூண்டுவிடத்தக்க மற்றோர் இடம் என்று கருதப்பட்டு வந்த எகிப்து இப்போது, சமரச ஒளி வீசும் இடமாகிவிட்டது. இந்த நிலைமை மலர்ந்திருப்பது கண்டு மகிழ்வதுடன், காலப்போக்கை உணர்ந்து காரியமாற்றிய பிரிட்டிஷாரின் யூகத்தைப் பாராட்டுகிறோம்.

வல்லரசுகள் தமக்குள் மூண்டுவிடும் தகராறுகளை, சமரசம் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை இந்தோ-சீன போர் நிறுத்த ஒப்பந்தம் உலகுக்கு எடுத்துக் காட்டுகிறது என்று, சூ-இன்-லாய் கூறினார். ஆம் என்று எகிப்து ஏற்பாடு அறிவிக்கிறது. இந்த அளவிலும் வகையிலும், வல்லரசுகள்பொறுப்புணர்ந்து நடந்து கொண்டால் போர் எழாமல் தடுத்துவிடலாம் என்று எண்ணவும், பூரிப்படையவும் முடிகிறது.

இந்தச் சமரச நோக்கம் பரவி, உலகம் பெரும் போர் மூளவேண்டும் என்று எண்ணிடும் போர் வெறியர்களின் எண்ணத்தில் மண்விழச் செய்தல் வேண்டும்.

இந்தோ-சீனா —எகிப்து— இரு ஆபத்துகள் நீங்கின, ஆனால் கொரியாவில், சிங்மன் ரீ, இப்போதும் கொக்கரித்துக் கொண்டிருக்கிறார். அமெரிக்காவிடம் சென்று ஆயுத உதவி கேட்கிறார். அமெரிக்கா, எங்கும் சமரசம் மலருவது கண்டு பயந்து, கொரியா விஷயத்தை மூட்டிவிடலாமா, என்று தீய எண்ணம் கொண்டிருக்கிறது.

இந்தோ-சீன போர்நிறுத்த ஒப்பந்தம், அமெரிக்காவுக்கும் பேரிடி! டாலர் கொட்டிக் கொடுத்தோம், எனினும், மெண்டிஸ் பிரான்ஸ், நமது முகத்தில் கரி பூசுவதுபோல இந்தோ-சீனாவுடன் சமரசம் செய்துகொண்டாரே, என்று தாங்கமுடியாத கோபம்தான். இந்தக் கோபத்தைக்கொண்டு கொரியாவில், விபரீத நிலைமையை உண்டாக்கலாமா என்று அமெரிக்கா சதி செய்கிறதோ, என்று பலரும் அஞ்சுகின்றனர்.

மூன்று நாட்களுக்கு முன்பு கூட இரண்டு சீன விமானங்களை சுட்டு வீழ்த்தியது, அமெரிக்கா.

ஆனால் அதற்கு முதல் நாள் அடையாளந் தவறாக சியாங் கின் விமானம் என்று பிரிட்டிஷ் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்திய சீனா, தன்னுடைய தவறுக்கு உடனே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விமானத்தில் உயிரிழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகவும் அறிவித்தது. இது கேட்ட பிரிட்டிஷ் பாராளுமன்றம் சீனாவின் சமாதான விருப்பத்தையும் தவறு உணர்ந்து அதைத் திருத்த உடனே முயன்றதையும், பாராட்டியது.

ஆனால், இந்த நல்ல எண்ணம் டாலர் ஆதிபத்தியத்திடம் காணோம்; இரண்டு சீன விமானங்களை சுட்டு வீழ்த்திய பின்னும், செஞ்சீனாவுக்கு எச்சரிக்கை விடுப்பதிலும், வளர்ந்துவரும் சர்வதேசிய நல்லுறவை பின்னாலிருந்து உடைக்கும் வகையிலும் அமெரிக்காவின் போக்கு இருக்கிறது.

ஆனால், இன்று, எல்லா நாடுகளுமே, அமெரிக்காவின் போக்கை வெறுத்திடத் தொடங்கிவிட்டன. அமெரிக்க உதவி, அமெரிக்க நேசம், அமெரிக்கத் தொடர்பு, என்றாலே, ஒரு அருவருப்பும், அச்சமும் பிறக்கிறது. உதவி பெறுகிற நாடுகள்கூட, வெளிப்படையாகக் கொள்ள வெட்கப்படுகின்றன. டல்லஸ் போன்றவர்களின் போக்கு, அமெரிக்காவுக்கு உலகிலே கெட்ட பெயர் ஏற்படவே வழி கோலியிருக்கிறது. எனவே கொரியாவில், அமெரிக்கா போர் மூண்டிட வழி காணாதும், உலகின் கண்டனம் கிளம்பி, அமெரிக்காவை அடக்கும் என்று நம்பவும் இடம் ஏற்பட்டு வருகிறது. இந்த நல்ல சூழ்நிலை வளர வேண்டும், நாடுகளுக்கிடையே போரும் பூசலும் எழாமல், உலகம் ஓர் கூட்டுறவு அமைப்பாக மாறிடவேண்டும் என்று, நல்லறிவாளர்கள் பலர் விரும்புவது போலவே, நாமும் விரும்புகிறோம், வளர்க சமரசம்.

இரத்தக் கண்ணீர்

[ஒரு உரையாடல்]

(ஒற்றன்)

[யார் யாருடன் பேசியது, எப்போது, எங்கே பேசியது என்பது முக்கியமல்ல. கற்பனைதான். ஆனால், நிலைமைக்குப் பொருத்தமான உரையாடல் அல்லவென்று கூற முடியாது.]

வெளுத்து வாங்கினோம் — சரியான சூடு—போடு போடு என்று போட்டுவிட்டோம்—ஆசாமிகள் திக்கித் திணறித் திகைத்துப் போவார்கள், சேதி கேள்விப்பட்டால்! ஒழித்துக் கட்டிவிட்டுத் தான் மறுவேலை என்றோம். ஒழிக்கா முன்னம் தாகசாந்தி கூடச் செய்யப் போவதில்லை, என்று தெரிவித்தோம்.

★

ஏன்? என்ன திடீரென்று கோபம்? கூடியது இதற்காகவா?

இருப்பதே, இதற்காகத்தானே!

★

நாடு, வேறு எத்தனையோ மகத்தான வேலைகளைச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறதே!

★

நாடு! நாடு!—கிடக்கட்டும், பிறகு பார்த்துக்கொள்வோம்—முதலில் இந்த 'நாறிப்போனது'களை நாட்டை விட்டு ஒழித்தாகவேண்டும்—பிறகு, நேரமிருந்தால், மற்ற வேலைகள்—நாடு, அறியச் செய்ததாக வேண்டும், இதுகளின் யோக்யதையை! புரட்டுகளை அம்பலப்படுத்தப்போகிறோம்! புல்லர்களின் கொட்டத்தை ஒழித்துக் கட்டப் போகிறோம்.

★

நாட்டிலே, முக்கியமானபல பிரச்னைகள் உள்ளன—பிரெஞ்சு ஆதிக்கம்—ஆந்திரப் பேராசை—மலபாரைப் பிடி—வடவர் ஆணவம்—முதலாளித்வ மூர்க்கத்தனம்.........

★

எத்தனையோ இருக்கிறது—கிடக்கட்டும்—முதல் வேலை, இதுகளுக்குச் சமாதி கட்டுவதுதான்......

ஏன்?

★

ஏனா! ஏன் என்றா கேட்கிறாய்! ஏன் என்றா, என்னைப் பார்த்துக் கேட்கிறாய்! உனக்குக் கண் இல்லையா! கருத்து இல்லையா! ரோஷம் இல்லையா...பார்த்தாயா அதுகளை... அதுகளுக்குக் கூட்டம், மாநாடு, நாடகம், சினிமா, புத்தக வெளியீடு, போராட்டம்,... அடஅடா அடா! கொட்டமடிக்கிறார்கள்—ஒரு தலைமை நிலையம், சொந்தக் கட்டடம்! கட்சித் தினசரி, கட்சிக்கு சொந்தத்தில் அச்சகம்—புயல் நிதியாம், வழக்கு நிதியாம், கைத்தறி ஆடை விற்கிறார்கள் இலட்சக் கணக்கில் விற்பனை... எட்டணா டிக்கட் கூட்டமாம், நாலணா டிக்கட் கூட்டமாம், நாடகமாம், இசை அலங்காரம்...

★

ப்பூ! இது தானா! செல்வாக்கற்ற இதுகளைச் சீந்துவார், யார்! கத்துகத்தெனக் கத்தினாலும் கூட்டம் சேருமா...நாடகமாடினால் நஷ்டம்தானே வரும்... சினிமாக்காரன் மட்டும் இதுகளிடம் இருக்கிற தமிழுக்கு என்ன பணம் தரப் போகிறான் இதுகள் போடும் புத்தகம் எப்படி விற்பனையாகும்—செல்லாக் காசுகள்—ப்பூஸ் போன பண்டங்கள்—நம்மோடு இருந்ததால, பூவோடு சேர்ந்த நார் ஆனதுகள்—இதுகள் தனிக்குடித்தனம் நடத்தி எப்படி வாழ முடியும்......

★

அப்படி எல்லாம் தான் சொன்னோம், முதலில்! கவனமிருக்கிறது எனக்கும், ஆமாம்!

இருந்த பிழைப்புப் போச்சு! இனி பட்டினிச் சாவுதான்! இதை இனிச் சீந்துவார் யார்?

(3-ம் பக்கம் பார்க்க).

ஏகாதிபத்தியப் போக்கு

கட்டாய இராணுவ சேவைக்கு உத்திரவு!

பம்பாய், ஜூலை 28—போர்ச்சுக்கீசியத் தி...டக்களில் ஒன்றான டாமனில், வீட்டிற்கு ஒரு ஆண் பிள்ளை இராணுவத்தில் கட்டாயமாகச் சேரவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறது.

இது டாமனில் பெரிய பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

டாமனில் போலீஸ் இலாகா தலைமை அதிகாரி ஒரு வெள்ளையர் அவர் தனது வேலையை இராஜிநாமா செய்துவிட்டு வெளியேறிவிட்டார் என்று தெரிகிறது.

அஸ்ஸாம் துண்டிக்கப்பட்டது

கௌகாத்தி, ஜூலை 28—வெள்ளப் பெருக்கின் காரணமாக அஸ்ஸாம் துண்டிக்கப்பட்டு விட்டது என்று தெரிகிறது. இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து தந்தி, ரயில் போக்குவரத்துக்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு விட்டன என்று தெரிகிறது.

'ஆண்டான் அடிமை உணர்ச்சியேதான் நிறபேத வளர்ச்சியின் அடிப்படை காரணம்'

'ஐரோப்பியரல்லாதார் மனதிலே புரட்சி பூத்து வருகிறது'

தென் ஆப்பிரிக்க நிற வெறியர்களுக்கு மால்ஹோத்ரா அறிவுரை

"நிறபேதம் என்பது ஒரு நாட்டினுடைய பிரச்சினை மட்டுமல்ல, அது உலகையே அச்சுறுத்தும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்ற பிரச்சினையாகும்."

"உலகிலே நிறவேற்றுமை எண்ணமானது 'ஐரோப்பியர்களும் அவர்களது வழி வந்தோரும் உயர்ந்த மனிதர்கள் அவர்கள்தான் உலக முழுமையும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற' கொள்கையின் காரணமாக ஏற்பட்டதாகும்.

"நிறபேத உணர்ச்சி எவ்வளவு விரைவில் செத்துப் மடிகிறதோ, அவ்வளவு சிறந்த முறையில் உலகில் சமாதானமும் ஏற்படும்."

—இவ்வாறு, தென் ஆப்பிரிக்க இந்திய தூதவராலய உதவி செக்ரட்டரியான தோழர் ஜே. எல். மால்ஹோத்ரா கூறினார்.

தென் ஆப்பிரிக்க சர்க்காரின் வேண்டுகோளின்படி இந்திய தூதவராலயம் மூடப்படுவதால், இந்திய அதிகாரிகளுக்கு தென் ஆப்பிரிக்க இந்தியர் காங்கிரஸ், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் இரண்டும் கூட்டாக அளித்த வழி அனுப்பு விழா ஒன்றில் பேசும்போதுதான் மால்ஹோத்ரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

'தென் ஆப்பிரிக்காவில் உள்ள வெள்ளையரல்லாதாருக்கும் பாதகமாக உள்ளதென்பதற்காக இந்திய சர்க்கார் ஆப்பிரிக்காவில் நிலவுகின்ற நிறவெறியைக் கண்டிக்கவில்லை; இப்பிரச்சினை ஆப்பிரிக்காவில் உள்ள ஐரோப்பியர்களுக்கும் தொல்லை தரக்கூடியது என்பதால்தான்."

தென் ஆப்பிரிக்க சர்க்காரின் வேண்டுகோளின் பேரில்தான் இந்தியர்கள் அங்கு வந்தார்களென்றும், இப்போது இந்தியர்களுக்குத் அபாயம் ஏற்பட்டுள்ளபோது தென் ஆப்பிரிக்க பிரச்சினைகளில் தலையிடவேண்டியது இந்தியாவுக்கு அவசியமாகிறது என்றும் மால்ஹோத்ரா கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"கடந்த 300 ஆண்டு காலமாக தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் தான் எஜமானர்கள்; கறுப்பர்கள் அனைவரும் வேலைக்காரர்கள் என்ற சமுதாய அமைப்பை ஏற்படுத்த ஐரோப்பியர்கள் முயன்றார்கள். இதன் காரணமாகவே நிறபேத பிரச்னைகளும் கறுப்பர்கள் மீது வெறுப்பும் ஏற்பட்டது.

தங்கள் முயற்சிக்கு ஆப்பிரிக்கர்கள் தலைவணங்குவார்கள் என்பதையும், இந்தியர்கள் தலைவணங்க மாட்டார்கள் என்பதையும் ஐரோப்பியர்கள் கண்டுகொண்டனர். அதனாலேயே ஐரோப்பியர்கள் இந்தியர்கள் மீது வெறுப்பை வளர்த்தார்கள்.

ஆனால், இந்த ஆண்டான் அடிமை முறையை ஆப்பிரிக்கர்களும் உணர்ந்துகொண்டால் கூலிகளாய் வாழ ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்ட ஐரோப்பியர்கள் வெள்ளையர் வாழும் தென் ஆப்பிரிக்கப் பகுதியில் ஆப்பிரிக்கர்கள் குடியிருக்க தற்காலிக பர்மிட்டுகளை வழங்கியிருக்கின்றனர்.

மண்ணுக்கு உரியவர்கள், சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய குடிமக்கள். மக்கள் எண்ணிக்கையில் முக்கியமானவர்களான ஆப்பிரிக்கர்களுக்கு தற்காலிக வாச பர்மிட்டுகள் வழங்கப்பட்டு, அவர்களிடமிருந்து குறைந்த கூலிக்கு உழைப்பைப் பெறுவதும் கொடுமையாகும்.

"நிறபேதம் பற்றி கவலைப்பெற்ற விவாதங்களினால் அதன் தன்மை என்ன, அதன் உண்மை சொரூபம் என்னவென்பதை உலகம் புரிந்துகொண்டது. முன்பெல்லாம் உலகம் அடிமைத் தன்மை பற்றி எண்ணவேண்டியிருந்தது. இப்போது நிறபேதம் பற்றி எண்ண வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி உலகம் நல்ல முறையில் சிந்திக்குமென்று நம்புகிறேன்.

"கடந்த ஐந்தாண்டுகாலமாக ஐரோப்பியரல்லாதார் மனதிலே நல்லதோர் அமைதியான புரட்சி ஒன்று நடைபெறுகிறது. அவர்களது கண்ணோட்டம் முழுமையுமே மாறிவிட்டிருக்கிறது. அடக்கப்பட்டுள்ள மக்கள் தங்களை அடக்கி ஆள்வோர்மீது வைத்துள்ள பயத்தை அகற்றிவிட்டார்கள் என்றால் பின்னர் அவர்களை அடக்கியாள்வது என்பது முடியாமற் போகும்.

"குறுகிய மனப்பான்மையும், அறிவீனமும், வெறுப்புணர்ச்சிகளும் மலிந்து கிடக்கும் இந்த நாட்டில் அன்பு வழியில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பாடுபட்டு வருகிறது. இந்திய சர்க்காரும் இந்திய மக்களும், தென் ஆப்பிரிக்காவில் நீதியின் அடிப்படையில் அனைவருக்கும் தகுந்த முறையில் வாய்ப்பளித்தரும் சமுதாய மொன்றை அமைக்க என்றுமே தங்கள் ஆதரவை அளித்து வருவார்கள்."

இந்தோ—சீனு கமிஷன்

கே. எம். பணிக்கர் தலைவராகலாம்

லண்டன், ஜூலை 28—

இந்தோ—சீனு போர் நிறுத்த மேற்பார்வைக் குழுத் தலைவராக திரு. கே. எம். பணிக்கர் நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

திரு. கே. எம். பணிக்கருக்கு சீனாவில் உள்ள அனுபவமும் செல்வாக்கும் இம்மாதிரி வேலைக்கு உபயோகப்படலாம் என்று தெரிகிறது.

திரு. சுகுமார்சென், திரு. கே. பி. மேனன் பெயரும் இதசம்பந்தமாக அடிபடுகிறது.

இணைப்பை ஆதரித்து

6 மாணவர்கள் உண்ணாவிரதம்

காரைக்கால், ஜூலை 28—

பிரெஞ்சிந்திய இணைப்புக் கோரிக்கையை ஆதரிக்கும் காரைக்கால் மார்டன் கல்லூரியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள், பிரெஞ்சிந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், வழக்கறிஞர்கள், வியாபாரிகள் ஆகியோரின் மனம் மாற வேண்டுமென்று உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர். மேற்கண்டவர்களின் உள்ளங்களில் ஆதிக்க எண்ணம் மறைந்து இணைப்புக் கோரிக்கைக்கு ஆதரவு கிடைக்கும் வரையில் தாங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

பீகாரில் பெருவெள்ளம்

1,000 சதுர மைல் பரப்பு பாதிக்கப்பட்டது

பாட்னா, ஜூலை 28—

கோசி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் சகர்ஷா மாவட்டத்தில் 1,000 சதுர மைல் பரப்பில் சேதம் ஏற்பட்டிருக்கிறதாம்.

பீகாரில் உள்ள ஒன்பது ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளம் நான்கு மாவட்டங்களைப் பாதித்திருக்கிறது.

வடமேற்கு வங்கத்தில் வெள்ளத்தால் 2,500 குடும்பங்கள் வீடின்றித் தவிக்கின்றனர்.

பீகார் சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர் என்று தெரிகிறது.

பஸ்களுக்கு மின்சார விசிறிகள்

கல்கத்தா, ஜூலை 27—

மின்சார விசிறிகள் முதலிய வசதிகள் அடங்கிய சர்க்கார் பஸ்கள் கல்கத்தாவில் விடப்படும் என்று தெரிகிறது. கூடிய சீக்கிரத்தில் பரீட்சார்த்தமாக பஸ் ஒன்று விடப்படும் என்று மேல் வங்க போக்குவரத்து டைரெக்டர் ஜெனரல் அறிவித்தாராம்.

அவர் மேலும் கூறுகையில் அடுத்த 5 ஆண்டுகளில் ரோடு போக்குவரத்து சர்வீஸ் பூராவும் கல்கத்தாவில் சர்க்கார் வசமாகும் என்று தெரிவித்தாராம்.

திரு. தமிழர் காங்கிரஸ் தலைவர் கைது!

சட்டசபையில் அவசரப் பிரேரணை!

நாகர்கோயிலில் தடியடி நடக்கவில்லையாம்!

மூணாறு, ஜூலை 28—

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ராமசாமி பிள்ளை மற்றும் ஐந்து பேர்களுடன் 144 தடையை மீறினார். உடன் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

★

தடியடிப் பிரயோகம் நடக்கவில்லையாம்

நாகர்கோவிலில் ஜூலை 26-ம் தேதி திருவாங்கூர் போலீசார் ஒரு கூட்டத்தைக் கலைக்க தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும் அதன் காரணமாக மாணவர்கள் சிலர் காயமடைந்தனர் என்றும் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்திகள் தவறானது, விஷமத்தனமானதென்று திரு—கொச்சி சர்க்கார் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கின்றனர்.

★

சட்ட சபையில் அவசரப் பிரேரணை

திருவனந்தபுரம், ஜூலை 28—

திரு.—கொச்சியில் நடைபெறும் தமிழர் அறப்போர் குறித்து அவசரப் பிரேரணை ஒன்று திரு.—கொச்சி சட்டசபையில் கொண்டுவரப்பட்டது.

இந்த அவசரப் பிரேரணையின் மீது பேசுகையில் அறப்போர் நடத்தும் மக்கள்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்கின்றனர் என்று கூறப்பட்டது.

அவசரப் பிரேரணைக்குப் பதில் அளிக்கையில், சட்டம் நாராயணபிள்ளை இராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷனின் அறிக்கை வெளியாகும் வரையில் காத்திருக்குமாறும் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துவது சரியல்ல என்று அங்கத்தினர்கள் யோசிக்கவேண்டும் என்று கூறினார்.

தி. மு. க. திறப்பு விழா

எருமப்பட்டி, ஜூலை 14—

13—7—54 மாலை 5 மணிக்கு எருமப்பட்டி தி. மு. கழகச் சார்பில் தோழர் பழனியப்பன் தலைமையில், வரதராசபுரம் தி. மு. கழகத்தை திறந்து வைத்து தோழர்கள் இராமசாமி, கும்பையன், இந்திரஜித் ஆகியோர் பேசினார்கள். தோழர் முத்து கருப்பன் கொடியேற்றி வைத்தார். மாலை 6 மணிக்கு ராமசாமி தலைமையில் முட்டாஞ்சட்டி தி. மு. கழகத்தை திறந்துவைத்து, தோழர் முத்துகருப்பன் பேசினார். தோழர் கும்பையன் கொடியேற்றி வைத்தார். இரவு 8-30 மணிக்குத் தோழர் முத்து கருப்பன் தலைமையில் எருமப்பட்டியில் தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்கள், நீண்டதோர் விரிவுரையாற்றினார். இராமதாசன் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

இரத்தக் கண்ணீர் [2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றுக்கும் இலாயக்கற்றது! உருப்படியாக எதையும் செய்யாது! உருத்தெரியாமல் ஒழிந்து போகும்! ப்யூஸ் போன பல்பு!

என்றெல்லாம்தான் சொன்னோம், ஆனால், உண்மையை மறைத்து என்ன பலன், உருவான கட்சியாகிவிட்டார்கள், ஊரார் மனதில் இடம் பெற்றுவிட்டார்கள், உருப்படியான காரியங்களைச் செய்கிறார்கள், கிளர்ச்சிக்குக் கலங்கவில்லை, போராட்டம் கண்டு பீதி அடையவில்லை, ஐயாயிரம் பேர் சிறை சென்றனர், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் கண்டனர், நாட்டிலே உள்ள கட்சிகளெல்லாம், இதுகளைக் கூர்ந்து கவனிக்கின்றன, நாட்டின் பிரச்சினைகளைப் பற்றி இதுகளின் அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறார்கள், சட்டசபைகளிலே எல்லாம் கூட இதுகளைப் பற்றிப் பேசப்படுகிறது...

★

இதனால் என்ன!—நமக்கு என்ன நஷ்டம்?

★

வைத்தியக்காரா! நஷ்டமா இல்லையா என்பதா கேள்வி! எதுகளை ஏளனம் செய்தோமோ, அதுகள் வளர்ந்து வனப்புள்ள உருவமும் பெற்றுவிட்டன! வாழ்த்தவா முடியும்! மகிழ்ச்சியா பொங்கும்!

★

உண்மையிலேயே, நாம் எதிர்த்து ஒழித்தாக வேண்டிய அளவுக்கு உருவமும் திறமும் கொண்டவர்களாகிவிட்டார்களா, அந்த ஓட்டைபோனதுகள்—ஓண்டக் குடிசையின்றித் திண்டாடியதுகள்......

★

ஆமாம்—மூடி மூடி வைத்துப் பயனில்லை—வளர்ந்து விட்டார்கள், கொழுத்து விட்டார்கள்—ஆகவே இப்போது, எதிர்ப்புப் பிரசாரப் பீரங்கி முழங்கியாக வேண்டும்......

★

முன்பு, அலட்சியப்படுத்தினோம், நாடு இதுகளை ஆதரிக்காது என்றோம்—இப்போது நாமே, இதுகளை மதித்து, பெரிது என்று எண்ணி, எதிர் பிரசாரம் செய்தால், இதுகள் வளர்ந்துவிட்டன, நாடு இதுகள் வளருவதற்கான ஆதரவு தந்து வருகிறது, என்று நாமே ஒப்புக்கொள்ளுவதாகத்தானே போகுமப்பே...

★

எந்த இழவுப் பொருள்பட்டாலும் சரி, இனி பொறுத்துக்கொள்ள முடியாது, பார்க்கப் பார்க்க வயிறு எரிகிறது, காணக் காண கண்களில் கனல் கிளம்புகிறது, ஆகவே

ஐயோ! ஐயோ! அடிக்கிறானே கொள்ளை!

லட்ச லட்சமாகப் பணம் சேர்த்துக்கொண்டான்!

பணத்திலே புரள்கிறான், படாடோபத்தில் மூழ்கிவிட்டான்!

கொள்ளை அடிக்கிறான், கோலாகலமாக வாழ்கிறான்!— இப்படிப் பேசி, இதுகளை ஒழித்துக் கட்டத் திட்டமாகிவிட்டது.

★

இதுவும் புதிதல்லவே! இதற்கு முன்பு தீட்டி நடத்தியுமிருக்கிறோமே.

★

இருந்தால் என்ன—மீண்டும் செய்வது ....புதுப்புது விஷயங்கள் சொல்வோம் ....அந்தப் பேர்வழி பயல் 666 ஏகரா நிலம் வாங்கி இருக்கிறான், அக்ரமம், அநியாயம், கொள்ளை, கொள்ளை என்று கூறுவது....

★

நம்புவார்களா ....?

★

நம்பினால் என்ன, நம்பாவிட்டால் என்ன—சொல்வது....நமது மனதுக்காவது ஒரு சாந்தி, சந்தோஷம், வெற்றி உணர்ச்சி ஏற்படாதா...

★

ஆமாம், அதுகள், நாட்டுக்குத் தேவையான பிரச்னைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, நாம், வெறும் 'மனிதர்கள்' அரசியல் பேசினால் மக்கள் என்ன கருதுவார்கள்.. நம்புகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம், நம்மிலே இருப்பவர்களையும் கவனித்தும் பார்க்க ஆரம்பித்தால், என்ன செய்வது, என்ன சொல்வது....

★

அதைப் பற்றிக் கவலைப் படுவதா, வைத்தியக்காரா! வாதுகிற சங்கை ஊதி வைத்தால், விடிகிறபோது விடியட்டுமே. !

(தொடர்ந்து வரும் வெளிவரும்)

கழகக்கூட்டங்கள்

★

மீஞ்சூர்

மணி டாக்கீசுக்கு எதிரில்
31—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். வி. தங்கசாமி
பேசுவோர்:
எம். ஜி. ராமச்சந்திரன்
முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

உடுமலைப்பேட்டை

ப்ரேவோ திடலில்
31—7—54 சனி மாலை
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

கோவை:

சிதம்பரம் பூங்காவில்
1-8-54 ஞாயிறு மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

பொன்மலை— மேலக்கற்கண்டார் கோட்டை

தி.மு.க. உறுப்பினர்கட்கு

1—8—54 ஞாயிறு காலை $10\frac{1}{2}$ மணிக்கு கழகக் கட்டிடத்தில், கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். கழகச் சார்பில் ஆகஸ்டு மாத இரண்டாவது வாரத்தில் பொதுக் கூட்டம் நடத்துவது பற்றியும், கழக சம்பந்தமான இதர விஷயங்களும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

7-வது வட்டக் கிளை

தி.மு.க. உறுப்பினர்கட்கு

மேற்படி கழகத்தில் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் 1—8—54 ஞாயிறு காலை 8-மணிக்குமேல் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும் அதுபோது கழக நிர்வாக உறுப்பினர்கள் தேர்தல் நடைபெறும்.

விரிவுரைப் பிரசங்கம்

அருப்புக்கோட்டை எஸ். பி கே. உயர்நிலைப்பள்ளி பழைய மாணவர் சங்கச் சார்பில் 1—8—54 ஞாயிறு காலை 10 மணிக்கு எஸ். பி. கே. உயர்நிலைப் பள்ளியில் விரிவுரைப் பிரசங்கம் நடைபெறும். டாக்டர் மா. இராஜமாணிக்கம் அவர்கள் "தமிழினம்" வாழ முடியுமா? என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சி கூட்டம்

1—8—54 ஞாயிறு காலை 10 மணியளவில் சென்னை முத்தியால் பேட்டை, நெ. 17, சால்விநாயகர் கோவில் தெருவிலுள்ள முத்தமிழ் மன்றத்தில் தோழர் என் மாரியப்பன் தலைமையில் சொற்பயிற்சி கூட்டம் நடைபெறும் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பேசுவர். பொருள்: "உலகை திருத்திய உத்தமர்கள்"

காரைக்குடிக்கு......

போதுச்செயலாளர்

அண்ணாதுரை வருகை

சென்னை, ஜூலை 30—

காரைக்குடியில் 1—8—54 ஞாயிற்றுக்கிழமை பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களுடன் காரைக்குடிக்கு வருவார்கள். பாண்டியன் பகுத்தறிவு படிப்பக ஆண்டு விழா நிகழ்ச்சிகளிலும், மாலை பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள். பிறகு, திருச்சி மார்க்கமாக காரில் சென்னை வந்து சேருவார்கள்.

காரைக்குடி

புதுச்சந்தைப்பேட்டையில்
பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழா
1—8—54 மாலை 3 மணிக்கு
தலைவர்: அ. பொன்னம்பலனார்
பேசுபவர்:
சி. என். அண்ணாதுரை

★

பொதுக் கூட்டம்

காந்தி சதுக்கத்தில்
1—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. பொன்னம்பலனார்
பேசுபவர்:
சி. என். அண்ணாதுரை

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பகம்

எண். 72; எம். சி, ரோடு; சென்னை—21.

1—8—54 ஞாயிறு இரவு 8 மணிக்கு புதிய உறுப்பினர் தேர்தல் நடக்க இருப்பதால், அங்கத்தினர்கள், அனைவரும் இதைப்பெ அழைப்பாக கொண்டு மேற்படி தேர்தலில் கலந்து கொள்ள வேண்டுகின்றோம்.

சென்னை மாவட்ட

தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

24—7—54 மாலை 6 மணிக்கு சென்னை ராயபுரம் அறிவகத்தில் சென்னை மாவட்ட தி மு கழக செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற சென்னை மாவட்ட கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

சுயமரியாதைக்காரரும் தி மு கழக முக்கியஸ்தருமாகிய சென்னை அங்கம்மாக்கம் தோழர் எஸ். பாலசுந்திரம் அவர்கள் மறைவுக்கும், கல்லக்குடி போராட்டத்தில் கலந்துகொண்டு 6 மாத சிறை தண்டனை பெற்று சிறையில் வாடிய தோழர் குமாரவேல் மறைவுக்கும், இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னார் களின் குடும்பத்தாருக்கு இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

தென்னாட்டின் எதிர்கால மக்களின் வாழ்வையே பாழாக்கும் ஆச்சாரியாரின் புதிய கல்வி திட்டத்தை நீக்கியதைக் குறித்து தோழர் காமராசர் அவர்களை இக்கமிட்டி பாராட்டுகிறது.

2-11-54 முதல் 24-7-54 வரை மாவட்டத்தின் வரவு ரூபாய் 2200—11—3; செலவு 2659—15—0 (மாநாடு—போராட்ட வரவு—செலவு கணக்கு நீங்கலாக) அதிகப்படி செலவாகியுள்ள ரூபாய் 459-3-9 வரவு-செலவு விவரங்கள் படிக்கப்பட்டு கமிட்டியினரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது வட்ட பிரதிநிதி தோழர் வ. செயச்சந்திரன் அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட உழவர் கட்சியின் நிர்வாகியாக உள்ளதால் தி. மு கழக சட்டத்தின் 6-வது விதிப்படி அங்கம் வகிக்க இயலாதென்ற காரணம் கூறி கழகத்திலிருந்து விலகிக் கொள்ளுவதென்று என்று எழுதி தந்த விலகுதல் கடிதத்தை பரிசீலனை செய்து கமிட்டி ஏற்றுக்கொண்டது.

சிங்கப்பூர் பயணம்

சென்னை, ஜூலை 30—

சிறுகுடி தோழர் சுப. மு இராமநாதன் அவர்கள், 29-7-54 காலை சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். 31—7—54ல் புறப்படும் கப்பலில் சிங்கப்பூருக்குப் பயணமாகின்றார்கள். சென்னை கப்பல் துறைமுகத்தில் நாளை 31—7—54 காலை 10 மணிக்கு நண்பர்கள் வழியனுப்பி வைப்பார்கள்.

உழவர் கட்சி மாநாடு

1-8-54 ஞாயிறு காலை 8 மணிக்கு விருத்தாசலம் சரஸ்வதி டூரிங் டாக்கீசில் நடைபெறும்.

தலைவர்: வி. கோபால கவுண்டர் எம். எல். ஏ.,

திறப்பாளர்:
எம். கே. ராமமூர்த்தி எம் ஏ,

சொற்பொழிவாளர்கள்:
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், க. அன்பழகன், எம் ஏ., சிற்றுளி சுப்ரமணியம், திருக்குறளார் வி. முனிசாமி எம். பி, ஏ. கோவிந்தசாமி, எம் எல் ஏ. டாக்டர் ஈ. மதுரம், எம். பி.. எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ. செஞ்சி பெரியண்ணகவுண்டர், ஆர். பாலகுருசாமி, ஏ. தங்கவேலு, குழந்தை மூப்பனார், ரத்தினம், முத்துரத்தினம். ச. இராசகோபால், கண்ணுசாமி ராஜா.

திருவள்ளுவர் திருநாள்

31—7—54 சனி இரவு 6 மணியளவில், சென்னை தமிழ் இளைஞர் எழுச்சி நிலையத்தார் திரு. கோ. சுந்தரேசன் அவர்கள் தலைமையில் தோழர் சி. மாமணி அவர்கள் தமிழ்க் கொடியேற்றுவார். தோழர்கள் ஆ. மேகநாதன், பி கே. இளமுகன் மற்றும் பலர் திருக்குறளின் பெருமை பற்றி சொற்பொழிவாற்றுவர்.

• • •

1—8—54 ஞாயிறு மாலை 6க்கு நாளை தி. மு கழகக் கட்டிடத்தில் அமைந்துள்ள பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் "வள்ளுவர் விழா" கொண்டாடப்படும். தோழர் பி. அம்மையப்பன் தலைமையின் தோழர்கள் எஸ். கல்யாணம், என் பி சதாசிவம், எ. கே. பாண்டியன், கே கே. சித்திரவேலு, என் ஜோசப், கே ராமன் மற்றும் பலர் பேசுவர்

மத்யபாரத் மந்திரி சபையை கலைக்கவும்

— (:) —

தேஷ்பாண்டே கோரிக்கை

திறமையற்ற நிர்வாகத்தினர் என்று குற்றச்சாட்டு!

இந்தூர், ஜூலை 26—

மத்திய பாரத் மந்திரிசபையைக் கலைக்க வேண்டுமென்றும், ஜனாதிபதியின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்றும், அகில இந்திய இந்து மகா சபைத் தலைவர் தேஷ்பாண்டே அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

இந்தூரில் மாணவர் கிளர்ச்சியை ஒட்டி நடைபெற்ற கலவரத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நேரில் அறிய தேஷ்பாண்டே இந்தூர் வந்திருக்கிறார்.

"மத்திய பாரத் சர்க்கார், நாட்டில், சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்கத் தவறியதுடன், மக்கள் உயிரையும், சொத்துக்களையும் காப்பாற்ற இயலாத நிலைமையில் இருக்கிறது,"

என்று தேஷ்பாண்டே குற்றம் சாட்டினார்.

"சமீபத்தில் நடைபெற்ற போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மாணவர்களோ, மக்களோ காரணமில்லை; நிலைமையை சகல முறையில் சமாளிக்க முடியாத சர்க்காரின் திறமையற்ற போக்கே இதற்குக் காரணம்; நிலைமையைச் சமாளிக்கப் போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை; துப்பாக்கிப் பிரயோகத்தால் மாணவர்கள் யாரும் மரணமடையவில்லை என்று பண்டித நேருவுக்குத் தவறாக செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது; மாண்டுபோனவர்களில் உயர்நிலைப் பள்ளி மாணவர் ஒருவர் இருக்கிறார்,"

என்று தேஷ்பாண்டே மேலும் கூறினார்.

எதும்புருவான இந்தி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி பெயர்ப்புகளாலோ ஒரு மொழிக்கு வளமை ஏற்பட்டுவிடாது என்பதை மறந்து விடுகிறார்கள்;

'மறுமலர்ச்சிக் கருத்துக்களையும், சிறந்த காவியங்களையும் கொண்ட தமிழ் மொழி பேசப்படும் தென்னாட்டில் ஐம்பது ஆண்டுகள் இடைவிடாது முயன்றாலும் தமிழர்களிடையே இந்தி மொழி பரவும் என்று கூற இயலாது.'

என்று கூறிய இந்தியின் எதிரியல்லாத டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரிகள் போன்றோரின் கருத்தை டாக்டர் ரகுவீரா போன்றவர்கள் உணர வேண்டும்;

"இந்தி தேசிய மொழியானால், மைசூரிலிருந்து மத்திய சர்க்காருக்குச் செல்லும் கடிதங்களை ஏராளமான இந்திய பண்டிதர்களை வேலைக்கு நியமித்து, இந்தியில் மொழி பெயர்த்து அனுப்பணும்; அதேபோல் டில்லியிலிருந்து மைசூருக்கு அனுப்பப்படும் கடிதங்களையும் மொழி பெயர்க்கலாம். இந்தி தேசிய மொழி என்ற கூற்று இதற்குத்தான் பயன்படும்;

"நாட்டு மக்கள் உள்ளங்களிலே எது தேசிய மொழியாகத் தகுந்தது என்ற பிரச்சினை அதிகமாக நிலவாத நேரத்தில், அரசியல் சுதந்திர உணர்ச்சியே எல்லோருடைய மனதிலும் நிறைவு பெற்றிருந்தபோது, அவசரம் அவசரமாக அகில இந்திய அரசியல் சட்டத்தை எழுதியவர்கள் எதுமபுருவாகக் காட்சியளிக்கும் இந்தி மொழியை தேசிய மொழியாகப் புகுத்திவிட்டார்கள். அதன் காரணமாகவே தென்னாட்டில் இந்த ஒரே தேசிய மொழி என்ற கோஷத்தை எதிர்க்கிறார்கள் என்பதை டாக்டர் ரகுவீரா போன்றவர்கள் உணர வேண்டும்;

"ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டு எழுதப்பட்ட சட்டங்களை அமுல் நடத்த எண்ணும் எந்த முயற்சியும் நாட்டிலே அழிவு காலம் ஆரம்பமாக உதவியதாகும்.

"இந்த எதிர்ப்பு வீணானது அல்ல; பழமையை மூடி மறைத்து அழகு பூச்சு பூச முயற்சிக்கும் போக்கிலிருந்து சுதந்திரமாக கலாச்சார வளர்ச்சி ஏற்பட விரும்பும் பெரும்பான்மையில் ஏற்பட்ட அவசியமான நிலைமையாகும்."

குறிப்பு:—ஆங்கில தினசரியான 'டெக்கான் ஹெரால்டு' இதழின் ஆசிரியர் போத்தன் ஜோசப் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்தியாவின் நடவடிக்கை

கொத்தலாவலை கவலை

கொழும்பு, ஜூலை 29—

"குறிப்பிட்ட எந்த தொழிலிலும் பயிற்சி பெறாத தொழிலாளரும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சென்றால் மீண்டும் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்; என்று இந்திய சர்க்கார் செய்துள்ள முடிவு கொஞ்சமும் நியாயமில்லாதது"

என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "இது மனிதத் தன்மைக்கு முரணானது என்று கூடச் சொல்லலாம்," என்றார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இதைப்பற்றி இங்கு வந்திருந்த இந்திய கீழ் மந்திரி தேஷ்முக்கிடம் தான் விவாதித்ததாகவும், இலங்கையின் கருத்தை இந்திய சர்க்காரிடம் தெரிவிப்பதாக அவர் ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அவர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது: "அடுத்த மூன்று மாதங்களில் 5000 பேர்களை மட்டும்தான் வெளியேற்றுவோம்; மீதமுள்ளவர்கள் விஷயம் பின்னர் கவனிக்கப்படும்," என்றார்.

கம்யூனிஸ்டு கட்சிக்குத் தடை

லாகூர், ஜூலை 29—

பாகிஸ்தானைச் சேர்ந்த பஞ்சாப் சமஸ்தானத்தில் கம்யூனிஸ்டு கட்சியும், அதனுடன் கூட்டுத் தொடர்புள்ள அமைப்புகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

லாகூர் போலீசார் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமைக் காரியாலயத்தையும், 'பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்' என்னும் கம்யூனிஸ்டு புத்தகாலயம் ஒன்றையும் 'சீல்' வைத்தனர் என்று தெரிகிறது.

சீனப் பிரதமருக்கு மாஸ்கோவில் வரவேற்பு

ஜினிவாவிலிருந்து தாயகம் திரும்பும் சீனப் பிரதமர் சௌ-என்-லாய் வழியில், மாஸ்கோவிற்கு வந்துள்ளார். அவரை விமான நிலையத்தில் சோவியத் வெளிநாட்டிலாக்கா மந்திரி மாலடோவ் வரவேற்றார்.

நிராகரித்தனர்!

அமெரிக்க செனட் சபை, மக்கள் சீனா ஐ. நா. சபையில் நுழைவதை எதிர்த்து ஓட்டளித்தது. 91 ஓட்டுக்கள் சீனா நுழையக் கூடாது என்றும், சீனா நுழைய வேண்டும் என்பதற்கு ஒரு ஓட்டு கூட கிடைக்காமலும் வோட்டெடுப்பு பதிவு செய்யப்பட்டது.

இராயபுரம் மூன்றுவது கழகத் அக்கரை தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (நெ. குகநாராயண செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.